R.Dis No:579/2023 Title Code No:TNTAM/24651

# திரை மொழி

THIRAI MOZHI TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

மலர் : 01 | இதழ் : 05 | டிசம்பர் - 2023 | பக்கம்: 8 | விலை: ரூ10

Volume : 01 | Issue : 05 | December - 2023 | Page: 8 | Price: Rs. 10

இசைத்துறையில் AI — Page 7

ஆவணத்திரைப்பட விழா — Page 3

கர்நாடக இசையும் திரை இசையும் — Page 2

திரையில் வசனகர்த் தாக்களின் ஆட்சி — Page 4



# கலைஞரின் திரைமுகம்



## கலைஞருக்கு திரையுலகம் நடத்தும் திருவிழா

மனித குல அறிவியல் கண்டுபிடிப்புகளில் மனித மனங்களை கவர்ந்த தலையாய பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்று சினிமா.

தமிழுக்கு திரைப்படம் வந்த புதிதில், பேசாப் படங்களையும், தொடர்ந்து புராணப் படங்களையும், இடைவிடாத பாடல்களையும், கேட்டுவந்த மக்களுக்கு, வசனங்கள் மூலம் திரைத்துறைக்கு புத்துணர்ச்சி ஊட்டியவர்களில் முக்கியமானவர் கலைஞர் கருணாநிதி அவர்கள். நடிப்பது, நாடகம் எழுதுவது, இலக்கியம் இயற்றுவது, வரலாற்று நாவல்கள் வடிப்பது, கவிதைகள் தீட்டுவது, பத்திரிக்கைக்கு கட்டுரைகள் எழுதுவது, மேடைகளில் முழங்குவது, திரைப்படங்களுக்கு திரைக்கதைவசனம் எழுதுவது, திரைப்பட பாடல்கள் எழுதுவது, தொலைக்காட்சி தொடர்களுக்கு திரைக்கதை வசனம் எழுதுவது போன்ற பல்வேறு முகங்கள் அவருக்கு உண்டு.



1947ல் ராஜகுமாரி தொடங்கி, 2011ல் பொன்னர் - சங்கர் வரை அவரின் எழுத்துப்பணி திரைத்துறையில் நீண்ட நெடியது; அசாத்தியமானது; அதிசயமானது. சூரியனுக் கும் அவருக்குமான போட்டியில் சூரியன் உதிக்கும் முன்னர் எழுந்து, சூரியன் மறைந்த பிறகும் பல மணி நேரம் ஓய்வறியாமல் உழைத்து, இறுதி வரை தனது மூளை அமைப்பில் உள்ள மேடு, பள்ளங்களை, சிந்தனைகளால் நிரப்பி, திரை ரசிகர்களின் உள்ளங்களை கவர்ந்தவர் நம் ஓய்வறியா சூரியன் கலைஞர் அவர்கள்!

சமூக நீதி கருத்துக்களை மையமாகக் கொண்டு அவர் எழுதிய பல வசனங்கள் சமூக மாற்றங்களை உருவாக்கியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

மறக்க முடியாத பல திரைப்பட படைப்புகளுக்கு சொந்தக்காரரான கலைஞருக்கு, அவரின் திரைமுகத்தை கொண்டாடும் விதமாக தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் தலைமையில், திரைத்துறையில் உள்ள அனைத்து சங்கங்களும் இணைந்து, கலைஞர்100 என்ற மாபெரும் கலைஞர் நூற்றாண்டு விழா வரும் ஜனவரி 6, 2024 அன்று சனிக்கிழமை மாலை நடத்த திட்டமிட்டுள்ளது.

இந்த விழாவில் பங்கேற்க தமிழ் திரையுலகை சார்ந்த முன்னணி நடிகர்களான ரஜினி, கமல், விஜய், அஜித், சூர்யா, விக்ரம் உள்ளிட்ட அனைத்து நடிகர்களுக்கும், இந்தியாவின் மற்ற திரைத்துறையை சார்ந்த பாலிவுட் நடிகர்களுக்கும், தெலுங்கு திரை உலகை சார்ந்த நடிகர்களுக்கும், கன்னட திரையுலகை சார்ந்த நடிகர்களுக்கும், மலையாள திரையுலகை சார்ந்த நடிகர்களுக்கும் மற்றும், திரைத்துறையை சார்ந்த அனைத்து தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக விழாக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.



தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம்
TAMIL FILM PRODUCERS COUNCIL

N. Ramasamy @ Murali, President
G.M. Tamil Kumaran
Mrs. Archana Kalpathi
S. Kathiresan
R. Radhakrishnan
S. Soundara Pandiyan
S. Chandra Prakash Jain

Date: 08.12.2023

**கலைஞர் - கலைஞர் 100**

தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் தலைமையில் திரைத்துறையில் உள்ள அனைத்து சங்கங்களும் இணைந்து கலைஞர்- கலைஞர் 100 என்ற மாபெரும் கலைஞர் நூற்றாண்டு விழா வருகிற 24.12.2023 அன்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் என்று அறிவித்து இருந்தோம்.

இந்நிலையில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மிக்ஜாம் புயலால் மக்கள் சிரமங்களுக்கு ஆளாகி உள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் அரசு நிர்வாகமும் மக்களுக்கான நிவாரண பணிகளில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார்கள். இவைகளை கருத்தில் கொண்டு 24.12.2023 அன்று நடைபெறவிருந்த கலைஞர் நூற்றாண்டு விழா 06.01.2024 சனிக்கிழமை அன்று மாலை நடைபெறும் என்று தெரிவித்து கொள்கிறோம்.

இப்படிக்கு
தமிழ் திரையுலகம்.

முன்னதாக இந்த விழாவானது சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் 24.12.2023 அன்று நடைபெறும் என திட்டமிடப்பட்டிருந்தது.இந்நிலையில் சமீபத்தில் மிக்ஜாம் புயலால் அனைவரும் பாதிக் கப்பட்டு இருப்பதால் இந்த நிகழ்வானது ஜனவரி 6ம் தேதிக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது. விழா நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி பக்கம் - 8




டிஸ்கவரி புக் பேலஸ்


டிஸ்கவரி ஆர்ட் கேலரி

டிஸ்கவரி புக் பேலஸ்

1055-B, முனுசாமி சாலை, கே.கே. நகர்,
சென்னை-78 | 9940446650

திரையிடல், நூல் வெளியீட்டுக்கான
70 பேர் அமரக்கூடிய சிற்றரங்கம்


பிரபஞ்சன் அரங்கம்


ஜெயகாந்தன் குடில்

டிஸ்கவரி புட் கார்னர்

# கர்நாடக இசையும் திரை இசையும்









மார்கழி மாதத்தின் சிறப்பு என்றால் அதை இசைமாதம் என்றுகூட கூறலாம் நமது திரை மொழி மாத இதழில் இந்த முறை மார்கழி மாதம் என்பதால், கர்நாடக இசையான வல்லிசை நமது திரை இசையில் எவ்வாறு பயணிக்கிறது என்பதையும், அதன் பரிணாம வளர்சியில் வந்த பாடல்கள் பற்றியும், இசைவித்வான்கள்பற்றியும் இந்த இதழில் நாம் காணவிருக்கிறோம்

தற்போது திரைப்படங்கள் வாயிலாகவும், சோசியல் மீடியாக்கள் மூலமாகவும், திரை இசை - கர்நாடக இசைத் தளத்திலும், கர்நாடக இசை - திரை இசைத்தளத்திலும், கைகோர்த்து வலம் வருவது இசை உலகிற்கும், இசை ரசிகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி மட்டுமல்ல, சுகாதாரமான விஷயமும் ஆகும்.

இசை பற்றிய பகிர்தலும், விவாதங்களும், நடத்திடும் அளவிற்கு இசை தொடர்பான மாத இதழ்களும், வார இதழ்களும், வெளிவரத் தொடங்கி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றிருப்பது இசைக்கான பெருமையையே காட்டுகிறது.

கர்நாடக இசை கலைஞர்களுக்கு எப்போது திரை இசையில் பாடுவது? என்ற ஏக்கமும், திரை இசைப் பின்னணி பாடுபவர்களுக்கு என்று கர்நாடக கச்சேரி மேடைகளில் பாடுவது? என்ற ஏக்கமும் எப்போதும் உண்டு.

என்னதான் கர்நாடக இசையில் திறன்மிக்க வித்துவானாக இருந்தாலும், ஒரே ஒரு பாடல் திரை இசையில் பாடினால் போதும்; அவர் புகழின் உச்சம் தொட்டு விடுவார்கள்.

இதற்கு நிறைய உதாரணங்கள் உண்டு. **தியாகராஜ பாகவதர், பி.யு. சின்னப்பா, கே.பி. சுந்தராம்பாள், சீர்காழி. கோவிந்தராஜன், கே.ஜே. ஏசுதாஸ், உன்னி கிருஷ்ணன், ஹரிஹரன், பாம்பே ஜெயஸ்ரீ, நித்யஸ்ரீ, சித் ஸ்ரீராம்,** என்ற வரிசை நீண்டு கொண்டுதான் இருக்கிறது.

ஆயிரக்கணக்கான பேர்கள் கர்நாடக இசையை கற்றுக் கொண்டும், பாடிக் கொண்டும் இருக்கின்ற சென்னை மாநகரில் விரல் விட்டு எண்ணுகிற அளவில்தான் திரைப் பின்னணி பாடகர்கள் இருக்கிறார்கள்.

கர்நாடக இசையை கற்றுக் கொண்டால், திரை இசை மெட்டுக்களின் நுனுக்கங்களை புரிந்து கொள்ளலாமே தவிர, கர்நாடக இசை கற்றுக்கொண்ட எல்லோராலும் திரை இசை பின்னணி பாடகராக ஆகி விட முடியாது.

காரணம்திரையிசைஎன்பதுஆரம்ப காலகட்டத்தில் கர்நாடக இசையை ஒத்தே இருந்தது. திரு. **எம்.எஸ். விஸ்வநாதன்** அவர்களுக்கு பிறகு அது மேற்கத்திய இசை கலந்த மெல்லிசை என்ற ஒரு பரிமாணத்தில் வழங்கப்பட்டது.

இன்றுவரைமேற்கத்தியஇசையின் 80 சதவிகித கலப்பினத்தில் தான் திரையிசை பாடல்கள் பரிமளித்துக் கொண்டிருக்கிறது.

இங்கே நாம் குறிப்பிட நினைப்பது கர்நாடக இசை என்ற வல்லிசை "ஒற்றைச்சுர வரிசையில்" இயங்குவது; சரி க ம ப த நி என்று ஒவ்வொரு சுரங்களின் மீதும் குரல் பயணிப்பது. மெல்லிசை என்ற மேற்கத்திய இசைப் பாணி Chords என்ற “கூட்டுச் சுரவரிசையில்" இயங்குவது ‘சகப’ என்ற மூன்று சுரமும் சேர்ந்தாற் போல குரல் பயணிப்பது.

எனவே, ஒருவர் எந்தத் துறைப் பாடகராக திகழ வேண்டும் என்பதை அவர்முதலில் தேர்ந்தெடுத்து, அதற்கான பயிற்சிகளையும், முயற்சிகளையும் தொடர வேண்டும்.

பொதுவாக,திரைப்படபின்னணிப் பாடகர் வெறும் ஒற்றைச்சுர வரிசையான கர்நாடக இசையை தனது குரலில் பயிற்சி செய்து மட்டுமே பயனில்லை. கூட்டுச் சுரவரிசையான மெல்லிசையையும் நன்கு பயிற்சி செய்திருக்க வேண்டும்.

அப்படி இரு இசையிலும் பயிற்சியும், குரல் வளம் மிக்க ஒருவரே திரை இசை பாடலும், கர்நாடக இசை கச்சேரியும் நிகழ்த்த முடியும் என்ற உண்மை விளங்காமல், **கர்நாடக இசையை கற்றுக்கொண்டு திரைப் படத்துறைக்கு முயற்சி செய்வதாலோ, திரைப்பட இசைகுழுவில் மட்டுமே பாடிய அனுபவத்தை மட்டுமே வைத்துக்கொண்டு கர்நாடக இசை கச்சேரிக்கு முயற்சி செய்வதாலோ, அவர்களுக்கான இலக்கை அடைவது தாமதமாகிறது.**

இவ்விரண்டையும் பெற, நல்ல அனுபவமிக்க ஆசானின் ஆலோசனைகள் மூலம் கைவரப்பெறலாம் என்பதை எப்போது ஒரு பாடகரோ, அல்லது மாணவரோ உணர்கிறாரோ அப்போது அது சாத்தியமாகும்.

உதாரணமாக, திரையிசையில் சில அபரிமிதமான கர்நாடக ராகங்களை நமது எம்.எஸ் விஸ்வநாதன், **இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான்,** ஆகியோர் கையாண்டு மெல்லிசையாக கொடுத்திருக்கிறார்கள். அதைக் கேட்கும் போது மெல்லிசையின் அழகு இருந்தாலும், அந்த மெட்டின் நுனுக்கங்கள் மிக நுண்ணிய சுரங்களின் அசைவுகளைக் கொண்டது என்பதை நன்கு இசையறிந்தவர்களே உணர்ந்து பாட முடியும்.

எடுத்துக்காட்டாக, நமது "இசை ஞானி" அவர்கள் இசையமைத்த **"ஹம்சநாதம்"** என்ற ராகத்தின் அடிப்படையில் அமைந்து தான் **"சொர்க்கமே என்றாலும்... அது நம்மூரு போல வருமா"** என்ற பாடல். கேட்பதற்கு ஒரு மெல்லிசைப் போலவே இருக்கும். ஆனால், அதில் வருகின்ற சங்கதியை கூர்ந்து கவனித்துப் பார்த்தால், அந்த இராகத்தின் கர்நாடக இசைக்கான சுரசஞ்சாரங்கள் தெரியவரும். இதே இராகத்தில் அமைந்ததுதான் **"தென்றல் வந்து என்னைத் தொடும்"** என்ற பாடல்.

இதுபோன்ற கர்நாடக இசை மேடைக்கு சவால் விடுகின்ற எத்தனையோ இராகங்கள் திரைஇசையில் எளிதாக நமக்கு கிடைத்திருப்பது நமது இசை சாம்பவான்களின் அரிய சாதனை என்று கூறுவது மிகையில்லை.

இதுபோலவே இப்படிப்பட்ட இசைகோர்ப்புகளை, மெட்டுகளை உள்வாங்கி பாடிய பாடகர்கள் இன்னுமொரு வரப்பிரசாதமாகும். அந்த வகையில், **மதுரை திரு. சோமு** அவர்கள் பாடிய, **“மருதமலை மாமணியே”,** டாக்டர். **பாலமுரளி கிருஷ்ணா** அவர்கள் பாடிய, **“ஒரு நாள் போதுமா“,** என்ற பாடல்களை **இன்றும் கூட திரை இசை பாடகர்களோ, கர்நாடக இசை பாடகர்களோ எடுத்து எளிதில் பாடி விட முடியாது.**

இவர்களைப் போன்ற ஒரு சிலர் மட்டும்தான் திரை இசையையும், கர்நாடக இசையையும் ஒரே அளவில் கோலோச்சுகிறார்கள். இசை விழாக்களில் இசை கலைஞர்கள் கையாளுகின்ற 90 சதவிகித ராகங்கள் திரை இசையிலும் கையாளப்படுகிறது என்பதே நிதர்சனமான உண்மை.

இங்கே குறிப்பிட்ட இராகங்கள் வெறும் பத்து சதவிகிதம் மட்டுமே... "கற்றது கைமண் அளவு.. கல்லாதது உலகளவு". மீண்டும், சில இசைப் பகிர்வுகளோடு சந்திப்போம். நன்றி.

அன்பன்,
**பழனி. ஞானசக்திவேல்,** MA (Music)

தொடர்புக்கு
நிர்வாக ஆசிரியர் N.மூர்த்தி
9500074478

# எழுத்தாளர்களை கொண்டாடும் ஆவணத்திரைப்பட விழா





எழுத்தாளர்
**மனுஷ்ய புத்திரன்**

தேசிய நூலக வாரத்தை ஒட்டி சென்னை தேவநேயப் பாவாணர் மைய நூலகத்தில் எழுத்தாளர்கள் குறித்த ஆவண படவிழா கடந்த நவம்பர் 14 முதல் 20 வரை நடைப் பெற்றது.

அதில் 18 ஆம் தேதி திரையிடப் பட்ட **சுந்தர ராமசாமி** குறித்த **'யார் நீ?'** என்ற ஆவணப்படத்தை ஒரு மதிய வேலையில் பார்த்தேன். ஏறக்குறைய இரண்டு மணி நேரம் அந்த ஆவணப்படம் ஓடுகிறது.

உணவு வேளைக்குப் பின்னான அசதியோ இடையில் தேநீர் நேரத் திற்கான தேவையோ இன்றி முழுமை யாக அது என்னை ஆக்கிரமித்துக் கொண்டது.

ஒரு எழுத்தாளர் பற்றிய தகவல் களின்தொகுப்பு என்பதாக இல்லாமல் அவரோடு நேரடியாக பழகும் பொழுது ஏற்படும் பேரனுபவத்தை அந்த ஆவணப்படம் வழங்கியது. இது கொஞ்சமும் மிகையில்லாத கூற்று.

சுந்தர ராமசாமியின் படைப்புக ளைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. அவரோடு பழகிய எழுத்தாளர்கள் கூறும் அனுபவங்கள் வருகின்றன. அவர் இலக்கியம் குறித்தும் வாழ்வு குறித்தும் பேசும் அரங்க உரைகள் வருகின்றன.

இவையெல்லாம் அவர் இலக் கியம் குறித்து ஒரு லட்சியவாதியாக திட்டவட்டமான கருத்துக்களைக் கொண்டிருந்த ஆளுமை என்பதை கம்பீரமாகச் சொல்கிறது.

இடையே அவரைக் கல்லூரி மாணவி ஒருவர் செய்யும் நேர்முகம் வருகிறது. அங்கே நெகிழ்கிறது. ஒரு பதினேழு அல்லது பதினெட்டு வயது கல்லூரி மாணவியுடன் ஒரு 70 வயது தாண்டிய எழுத்தாளர் பேசுகிறபோது எந்த விதமான இடைவெளியும் இன்றி அந்தப் பெண்ணைத் தனக்குச் சமமாக மதித்து அவரோடு உரையாடுகிறார். அதே வேளையில் அந்தப் பெண்ணின் வயதுக்கே அவர் சென்று கேலி கிண்டலோடும் பேசுகிறார். அவர் கேள்வி கேட் பதற்கான ஒரு சௌகர்யத்தை இயல்பாக உருவாக்குகிறார். அந்தக் கேள்வி பதில் அவரைப் பற்றி ஒரு முழுமையான சித்திரத்தை நமக்குள் வரைந்து விடுகிறது. **இந்த ஆவணப் படம் அங்கே தன் மையத்தைத் தொட்டுவிடுகிறது. சுந்தர ராமசாமி குறித்த சாரம்சம் அவ்வுரையாடல் மூலம் கிடைக்கிறது.** அவருடைய எழுத்து எவ்விதமானது என்பதையும் அதை எழுதுகிற எழுத்தாளர் அந்த எழுத்திலிருந்து வேறுபட்டவர் அல்ல என்பதையும் அது சொல்லுகிறது.

சுந்தர ராமசாமி வாழ்ந்த வீடு, அவர் குடும்பத்தினர் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணங் கள் இவற்றை பதிவு செய்த ஆவணப் படம் அவர் பிறந்த பூர்வீக வீட்டுக்குச் சென்று அங்கே அவர் பிறந்த அறையை காட்டுகிறது. அங்கு இப்போது குடி யிருக்கும் சுந்தர ராமசாமியின் உறவி னர்கள் அவரைப் பற்றி என்ன நினைக் கிறார்கள் என்பதைப் பதிவு செய்கிறது. அந்த ஊரில் வாழும் சாதாரண மனிதர்கள் இந்த எழுத்தாளர் குறித்து என்ன சொல்கிறார்கள் என்பதையும் காட்டுகிறது.

**ஆவணப்படம் எடுக்கும்போதே எதிர்பாராதவிதமாக அவர் இறந்து விடுகிறார்.**

**அமெரிக்காவுக்குச் சென்று அங்கு இறந்து விடுகிற சுந்தர ராமசாமி மீண்டும் இந்தியாவிற்குத் திரும்பும் போது பயணிகள் வரும் வழியில் வராமல் சாமான்கள் வரும் வழியில் இறந்த உடலாக வருவதைச் சொல்கிறது.**

தமிழ், மலையாளம் சார்ந்த ஏராள மான எழுத்தாளர்கள் அவர் உடலுக்கு மரியாதை செலுத்துவதைக் காட்டுகிறது. எழுத்தாளர்களுக்கு ஒரு சொந்த வீடு போல் தன் வீட்டை எண்ணவைத்த சுந்தர ராமசாமியின் மரணம் அவர்களுக்கு எவ்வளவு வேதனை தருவதாக இருக்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்கிறது.

மரணத்திற்குப் பிறகு தன் உடலுக்கு எவ்விதமான சடங்குகளும் கூடாது என்று சுரா கூறியதை ஏற்று அவர் குடும்பமும் அப்படியே சடங்குகள் ஏதுமின்றி தகனம் செய் கிறது. அதைக் குறித்தும் படத்தில் விவாதம் வருகிறது.

ஆலயமணி ஓய்ந்தாலும் அதன் அதிர்வுகள் ஓய்வதில்லை என்பதைப் போல அவர் மரணத்தோடு நிற் காமல் அதற்குப் பிறகும் நீளும் அவரையும் அவரைப் பற்றிய உரை யாடல்களையும் ரூபமாகவும் அரூப மாகவும் வரைகிறார் இயக்குநர்.

அவர் பேரனோடு அவர் பழகி யவிதம், பள்ளி மாணவி ஒருத்தி தன் பள்ளிக்கூட பாடப் புத்தகத்தில் அவர் பற்றிய பாடம் இருப்பதைப் பேசுவது என்று **நீண்டு நாகர்கோவில் இருந்து திரும்புகிறபோது ஒரு நீண்ட பாதையைக் காட்டும் ஷாட் மூலம் நெடிய மௌனத்தை எழுப்புகிறது. அது நம் மனதில் நிகழும் மௌனம்.** ஒரு மாபெரும் ஆளுமை மறைந்த வெற்றிடம். யானை ஒன்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த குழந்தை திடீரென்று யானை சென்றதும் கொள்ளும் திகைப்பு.

பிறப்பு முதல் இறப்பு வரை அவரை ஆவணப்படுத்தும் முயற்சி யும் சுரா மீது இயக்குநர் ஆர்.வி. ரமணிக்கு இருக்கும் காதலும் படத் தின் மூலம் நமக்குத் தெரிகிறது.

சுந்தர ராமசாமியின் எழுத்துக்களை நான் படித்திருக்கிறேன். என் கல்லூரிக் காலத்தில் **'ஜே.ஜே: சில குறிப்புகள்'** வெளிவந்தபோது ஒரு கங்காருவைப் போல் அதைச்சுமந்துதிரிந்திருக்கிறேன். அவர் நடத்திய 'காலச்சுவடு' இதழில் என் கவிதை வெளிவந்து இருக்கிறது. ஆனால் ஒருமுறை கூட அவரைச் சந்தித்து அவரோடு உரையாடியதில் லையே என்ற மனக்குறை எனக்கு இருந்தது. அந்த குறையை முழுமை யாகத் துடைத்து விட்டது இந்த ஆவணப்படம்.

**ஒரு எழுத்தாளர் தன் வாசகனின் தோளின் மீது கை போட்டுக் கொண்டு ஒரு தனித்த சாலையில் பேசும் அனுபவத்தை 'யார் நீ? 'என்ற இந்த ஆவணப் படம் வழங்குகிறது.**

இதன் இயக்குநர் **ஆர்.வி. ரமணி** அவர்களோடு ஓர் உரையாடலும் திரையிடலுக்குப் பின் நிகழ்ந்தது. பலரும் இயக்குனரைப் பாராட்டினர். எழுத்தாளர் சுந்தர ராமசாமி குறித்த குறித்த தங்கள் மதிப்பையும் நெகிழ் வையும் பகிர்ந்து கொண்டனர்.


**'யார் நீ?'** இப்போது *You tube* லும் பார்க்கக் கிடைக்கிறது. விரும்புப வர்கள் பார்க்கலாம்.


**நூலக வாரத்தில் இப்படி ஆவணப் பட விழா ஒன்றை நடத்தும் நூலக ஆணைக்குழுவுக்கும், கவிஞர் மனுஷ்ய புத்திரனுக்கும் என் பாராட்டுகள்.**

எழுத்தாளர்கள் குறித்த ஆவண படங்களை தொடர்ந்து திரை யிடுடம் ஒரு திரைப்பட விழா இந்தியாவிலேயே **இதுதான் முதன் முறை என்று அறிகிறேன்** அதற்காக வும் என் வாழ்த்துக்கள்.

இது ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெறும் என்று, தன் உரையில் மனுஷ்ய புத்திரன் குறிப்பிட்டார். **ஒரு கவிஞனை, எழுத்தாளனை நூலக ஆணைக்குழு போன்ற பொறுப்பில் நியமித்தால் என்னென்ன நிகழும் என்பதற்கு உதாரணம் இந்த ஆவணப் பட விழா.**

- இயக்குநர் **பிருந்தா சாரதி**








# திரையில் வசனகர்த்தாக்களின் ஆட்சி



இளங்கோவன்



ஜெயகாந்தன்

சினிமா என்பது காட்சியின் வடிவம் தான் என்றாலும் பல இடங்களில் வசனத்தாலும் ரசிகர் களின் உள்ளத்தைகவரவேண்டும். காட்சியும் வசனமும் சரியாக இணைந்து விட்டால் அந்த படம் மக்கள் மனதில் காலத்துக்கும் நிற்கும்.

**சினிமாவின்வசனம்எழுதியவர்கள் அரசியல் சிம்மாசனத்தில்அமர்ந்த வரலாறும் இங்கு உண்டு.**

சினிமாவில் நாயகன் நாயகி பேசும் வசனம் அவ்வப்போது மாறி கொண்டேவரும். தொடக்ககாலத்தில் இலக்கிய தன்மையுடன் பேசி கொண்டிருந்தவர்கள்



இயக்குநர் ஸ்ரீதர்

**இயக்குநர் ஸ்ரீதர்** வருகைக்குபின் பேச்சு வழக்கில் எப்படி பேசுவோமோ அது போலவே எளிமையாக திரையில் பேசினர்.

இந்த மாற்றம் மக்களை பெரிதும் கவர்ந்தது.

இயக்குநர்கள் கதை எழுதினாலும் வசனத்தில் முத்திரை பதித்த நம் திரை ஜாம்பவான்கள் பற்றி இந்த கட்டுரையில் பார்ப்போம்.

தமிழ் சினிமாவின் தொடக்கத்தில் அதாவது 1940 காலகட்டங்களில்

**இளங்கோவன்** அவர்கள் வசனம் மக்களை பெரிதும் கவர்ந்தது, **3 ஆண்டுகள் ஒடிய பாகவதரின் ஹரிதாஸ்** போன்ற வெற்றி படங்களுக்கு எழுதியுள்ளார். இவரின் வசனத்தில் வந்த **கண்ணகி** படம் மிக மிக பெரிய வரவேற்ப்பை பெற்றது.

**அண்ணாதுரை** அவர்கள் வசனம் எழுதிய **ஓர் இரவு, நல்ல தம்பி, வேலைக்காரி,** போன்ற படங்கள் பெரிதும் பேசப்பட்டன. அவர் வசனத்தில் சமூக கருத்துக்கள் அனல் பறக்கும்.

இவர் அரசியலிலும் பெரிய சக்தியாய் விளங்கினார்.

இவருக்கு பின் வந்த **கலைஞர் கருணாநிதி** அவர்கள் எழுதிய **பராசக்தி, மனோகரா, பூம்புகார்,** போன்ற என்னற்ற படங்கள் வசனத்துக்காகவே பல நாட்கள் ஒடியது.

**பராசக்தி** படத்தில் சாலையில் தூங்கி கொண்டிருக்கும் கதா நாயகனை போலிஸ் எழுப்பி **“என்னடா முழிக்கற”**? என கேட்க, அதற்கு கதாநாயகன் **“தூங்கி கொண்டிருந் தவனை எழுப்பினால் முழிக்க தானே செய்வான்”** என பதில் சொல்வார், இப்படி நகைச்சுவை யாகவும், நீதிமன்றத்தில் கதாநாயகன் பேசும் **“ஓடினாள் கல்யாணி வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்** என பேசும் நீண்ட வசனத்தில் நாட்டில் நடக்கும் சமூக சீர்கேடுகளய் தன் பேனாவினால் சீவி விட்டிருப்பார்.

தான் முதல்வர் ஆனபின்பும் தன் பேனாவை ஆறாவது விரலாகவே வைத்திருந்தார் என்பது இவரின் சாதனையாகும்.

அரசியல் வேலைகளுக்கிடையில் தொலைக்காட்சி தொடர்களுக்கும் வசனம் எழுதினார் அதில் முக்கிய மானது ராமானுஜர் தொலைக்காட்சி தொடர்.

**ஆருர் தாஸ்** தமிழ் சினிமாவில் உதவி இயக்குனராய் சேர்ந்து பின் 1000 படங்களுக்கு மேல் வசனம் எழுதியவர். பீம்சிங் அவர்களின் படங்களான **பாசமலர், பாவ மன்னிப்பு, பார்த்தால் பசி தீரும்** என பல படங்களுக்கும், **எம்ஜி ஆர்** அவர்களின் பல படங்களுக்கும் வசனம் எழுதி சாதனை படைத்தவர்.

பாடல்கள் எழுதி வந்த **கண்ணதாசன் நாடோடி மன்னன், மலைக்கள்ளன், சீவகங்கை சீமை** என பல படங்களுக்கு வசனம் எழுதினார்.

**தெய்வத்தாய்** படம் மூலம் வசனகர்த்தாவாய் **பாலசந்தரும் ரத்த பாசம்** மூலம் **ஸ்ரீதர்** அவர்களும் அறிமுகமாகி பின் இயக்குநர் ஆனார்கள்.

**வியட்நாம் வீடு சுந்தரம்** அவர்கள் எழுதிய **வியட்நாம் வீடு, கவுரவம்,** போன்ற பல படங்கள் வசனத்திற்காகவே ஓடியது. **சிவாஜி** அவர்களின் நடிப்புக்கு தீனி போட்டது இவரின் வசனங்கள்.


**ஏஎல்நாராயணன்** அவர்கள் பல படங்களுக்கு வசனம் எழுதி வந்தார்.

80 களின் கால கட்டத்தில் **பஞ்சு அருணாச்சலம்** அவர்கள் **கண்ணதாசன்** உதவியாளராக இருந்து பின்னர் கதை வசனகர்த்தாவாக பல படங்களுக்கு எழுதி உள்ளார்.

**சலங்கைஒலி, மன்வாசனை** போன்ற மிக சிறப்பான படைப்புகள் இவரின் வசனத்தில் உருவானவையே

இவரின் கதை திரைக்கதை வசனம் என அனைத்துமே மக்களின் வரவேற்பை பெற்ற படங்களாகும்.

குடும்ப காவியங்கள் தரும் **விசு** முதலில் வசனகர்த்தாவாக அறிமுகம்



எழுத்தாளர் சுஜாதா



ஆரூர்தாஸ்

ஆகி **தில்லு முல்லு, நெற்றி கண், புது கவிதை** போன்ற பல படங்களில் தன் திறமை காட்டியபின்பே இயக்குநர் ஆனார்.


பின்னர் இயக்குனராக விசு ஆனாலும், வசனம் சாட்டையடியாக இவர் படத்தில் தனியாக தெரியும்.

திரைக்கதை மன்னன் என பெயரெடுத்த **கே.பாக்யராஜ்** அவர்கள் **பாரதிராஜா** அவர்களிடம் உதவி இயக்குனராய் இருந்து பின்னர் **சிவப்பு ரோஜாக்கல்** மூலம் வசனகர்த்தாவாய் ஆனார் என்பது குறிப்பிடதக்கது

எழுத்தாளர் **புதுமைபித்தன்** சில படங்களுக்கு வசனம் எழுதினார். அதில் **தியாகராஜ பாகவதர்** நடித்த **ராஜமுக்தி** படமும் ஒன்று

**ஜெயகாந்தன்** அவர்கள் சில படத்துக்கு வசனம் எழுதினார்.

அதில் சில **நேரங்களில் சில மனிதர்கள்,** யாருக்காக அழுதான்



வியட்நாம் வீடு சுந்தரம்

போன்றவை சிறந்த ஒன்றாகும்.

அதன் பின் **சுஜாதா** அவர்கள் **விக்ரம், நினைத்தாலே இனிக்கும்,** போன்ற படங்களீல் வசனம் எழுதி னாலும் **மனிரத்னம்** அவர்களுடன் இணைந்து **ரோஜா, கன்னத்தில் முத்த மிட்டால்** போன்ற படங்கள் பெரிய பெயரை கொடுத்தது. அளவான வசனம் இவர்கள் வருகைக்கு



பஞ்சு அருணாசலம்

பின்னரே வந்தது.

இயக்குநர் ஷங்கருடன் இவர் இணைந்து இவர் எழுதியப டங்களில் **இந்தியன், முதல்வன்** என பல படங் களை மக்கள் கொண்டாடினர்.

**பாலகுமாரன்** அவர்கள் எழுதிய **நாயகன், பாட்ஷா, சிட்டிசன், புதுப் பேட்டை** போன்ற என்னற்ற படங்கள் வசனத்தை கவனிக்க வைத்தது.

**“நாலு பேருக்கு நல்லது செய்யனும்னா எதுவும் தப்பில்ல”** என்ற நாயகன் வசனமும், **“ஒருதடவை சொன்னா”** என சொல்லும் பாட்ஷா வசனமும் என்றுமே மறக்க முடியாத ஒன்றாகும்.

அண்மை காலங்களில் பல பெரிய இயக்குநர்களின் படைப் புகளில் இடம்பெற்ற முக்கிய மான வசனகர்த்தாக்களில் குறிப்பிடத்தக்க வர்கள் **பட்டுக் கோட்டை பிராபகர், சுபா (சுரேஷ் பாலகிருஷ்ணன்), ஜெய மோகன்** மற்றும் **மதன் கார்கி.**

**பாசில்** அவர்களது இயக்கத்தில் வந்த **பூவே பூச்சூடவா, என் பொம்முக் குட்டி அம்மாவுக்கு, வருஷம் 16, காதலுக்கு மரியாதை** என படங்களுக்கு வசனம் எழுதிய **கோகுல கிருஷ்ணன்** மிக சிறந்த வசனகர்த்தாவாக வாழ்ந்து மறைந்தார்.

90களில் அரசியல் அனல் பறக்கும் வசனங்களுக்கு பெயர் போனவர் **லியாகாத் அலிகான்.** கேப்டன் விஜயகாந்தும் இவரும் சேர்ந்த படங்கள் வசனங்களுக்காகவே ஒடியது; **புலன் விசாரனை, கேப்டன் பிராபகரன், மாநகர காவல், மக்கள் ஆட்சி** என பல படங்கள் கூறலாம். இவர் இயக்குனரான பின்னரும் இவரது படங்கள் வசனத்துக்கு முக்கியதுவம் பெற்றது.

அந்த காலகட்டத்தில் **ஈ.ராமதாஸ்** அவர்களும் வசனத்தில் புகழ் பெற்றார். **கண்டநாள் முதல், ராஜமுத்திரை** என பல படங்கள் எழுதியுள்ளார்.

வசனத்திலிருந்து பின்னர் இயக்குனராகவும் திகழ்ந்தார் **விஜி** அவர்கள் எழுதிய **அழகிய தீயே, மொழி** என பல படங்களில் அவரது குறும்பான நகைச்சுவை வசனம் நம்மை சிரிக்க வைக்கும்.

தமிழ் சினிமாவின் எல்லாருக்கும் பிடித்த ஒரு வசனகர்த்தா என்றால் அது **கிரேசி மோகன்** அவர்களே.

**அபூர்வ சகோதரார்கள், மைக்கேல் மதன காமராஜன், பஞ்சதந்திரம், ஆஹா** என அடுக்கி கொண்டே போகலாம். அனைத்தும் நகைச்சுவை சரவெடிகள். இவரது வசனத்தால் பலர் தங்கள் கவலைகளை மறந்துள்ளனர்



கிரேசி மோகன்



பால குமாரன்

என்பது மறுக்கப்படாத உண்மை.

எழுத்தாளர்கள் **பாஸ்கர் சக்தி** எழுதிய **எம் மகன், அழகர் சாமி குதிரையும், எஸ்.ராமகிருஷ்ணன்** எழுதிய **சண்டகோழி, பாபா, உன்னாலே உன்னாலே,** போன்ற பல படங்களிள் எழுதி உள்ளனர்.

நடிகர்களாகிய **கமலஹாசன்** அவர்கள் வசனம் எழுதிய **தேவர் மகன், ரஜினிகாந்த்** அவர்கள் வசனம் எழுதிய **வள்ளி** போன்ற படங்களும் வசனத்துக்கு பெயர் பெற்ற படங்களாகும்.

இப்படி என்னற்ற வசனகர்த்தாக் கள் தமிழ் சினிமாவில் தாமும் வெற்றி பெற்று படத்தையும் வெற்றி பெற செய்யவைத்தார்கள்.

அரசியல், சமூகம், நல்ல விஷயங் கள் என ஒரு வசனகர்த்தாவின் வசனங் கள் சினிமாவை பார்க்கும் ரசிகனிடம் மிக பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆதலால் வசனம் என்பது சினிமாவின் ஒரு முக்கிய பங்கு உள்ள ஒரு துறையாகும்.

தன் பெயரில் மட்டுமே கதை, வசனம் வரவேண்டும் என இயக்கு நர்கள் அடம்பிடிக்காமல் தனது படத்திற்கு தேவையான வசனம் எழுதுபவர் இருந்தால் அவரை அணுகி படத்தை மெருகேற்றலாம். வெற்றிக்கு அதுவே வழியாகும்.

-இயக்குநர் **ஸ்ரீராம் பத்மனாபன்**




விளம்பரத்திற்கு அணுகவும்

9500074478

9566153766

உங்கள் கருத்துக்களை வரவேற்கிறோம்!

கருத்துக்களை அனுப்ப வேண்டிய மெயில் ID:


thiraimozhinews@gmail.com

9500074478 | 9566153766






கரன் ஜோகர்




# உலக அரங்கில் கோடிகளில் வசூலைக் குவித்த முதல் இந்திய திரைப்படம்

உலக அரங்கில், இந்திய திரைப்படத் துறையில் கதை சொல்லும் பாணி என்பது மிக முக்கியமான ஒரு அம்சம் என்பதை நாம் எப்போதும் மறந்து விடக்கூடாது.. நாம் சில காலமாக கண்டு கொண்டிருக்கும் கொரிய திரைப்படங்களும், பிரஞ்சு மொழி திரைப்படங்களும், "ஆகா", "ஓகோ", என்று நாம் தலையில் தூக்கி வைத்து ஆடினாலும், அவர்கள் மிக முக்கியமாக தொட்டுள்ள செண்டிமெண்ட் எமோஷனல் இந்திய திரைப்படத்திற்கு உரித்தான ஒரு டச் ஆகும்.. ஆனால் சமீப கால திரைப்படங்கள் ஆக்ஷனிலும் வெளிநாட்டு பாணியில் கதை சொல்லும் யுக்தியலும், நம் இந்திய திரைப்படத்திற்கு சொந்தமான சில அம்சங்களை நாம் மறந்து விட்டோம்.

நமது வாழ்வில் அன்றாடம் நடக்கும் நிகழ்வுகள் தான் கதைகளாக மாறி திரைப்படங்களாக உருவாகின்றன. அதில் ஒரு சில முரண்பாடான கதைகளை யோசிப்பதும், திரைப்படமாக உருவாக்குவதும், மக்களிடையே கொண்டு சேர்ப்பதும் மிகவும் கடினமான வேலை. அதை மிக சர்வ சாதாரணமாக இந்திய திரை உலகில் பதிவு செய்துவிட்டு கடந்திருக்கிறார் இயக்குநர் கரன் ஜோகர்.

**அமிதாப்பச்சன், ஷாருக் கான், அபிஷேக் பச்சன், ப்ரீத்தி ஜிந்தா, ராணி முகர்ஜி,** போன்ற மிகப்பெரிய நட்சத்திர பட்டாளத்தை வைத்து யாரும் யோசித்துக் கூட பார்க்க முடியாத ஒரு கதையை மிக எளிமையாக, நேர்த்தியாக, மிக மிக புத்திசாலித்தனமாக ஒரு திரைப்படமாக உருவாக்கி, **இந்திய திரைப்பட வரலாற்றில் திரைப்பட எழுத்தாளர்களுக்கு ஒரு சவால் நிறைந்த கதையாக திரைக்கதையாக, ஒரு திரைப்படமாக உருவாக்கி, அதில் வெற்றியும் கண்டார் இயக்குநர் கரன் ஜோகர்.**

ஒரு கதாசிரியராக எனக்கு, இப்போது வரை இந்த திரைப் படத்தின் கதையை எவ்வாறு தயாரிப் பாளரிடம் இந்த இயக்குநர் கூறினார்? இதுபோன்ற ஒரு மாறுபட்ட கதையை நடிகர், நடிகைகளிடம் எப்படி கூறினார்? இது போன்ற ஒரு கதையை உருவாக்கக்கூடிய தைரியம் எங்கிருந்து வந்தது? இது போன்ற பல கேள்விகள் இன்னும் என் மனதில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

இந்திய திரைப்படத்துறையில் காதல் கதைகள் என்றால் எண்ணில் அடங்காமல் ஏராளமாக, பல விதங்களில், பல கோணங்களில், பல மொழிகளில், பல இயக்குநர்களும் உருவாக்கி விட்டுச்சென்று விட்டார்கள்;இன்னும் உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். வரும் காலங்களிலும் உருவாக்கத் தான் போகிறது...

காதல் கதைகளில் கூட பலதரப்பட்ட காதல் திரைப் படங்களை நாம் பார்த்து விட்டோம். உதாரணத்திற்கு பள்ளி காதல், கல்லூரி காதல், திருமணம் ஆக போராடும் காதல், பார்க்காத காதல், ஒரு தலை காதல், என்று ஓர் ஆயிரம் காதல் கதைகளை நாம் கண்டு கடந்து இருக்கிறோம்.. எல்லாவிதமான காதலும் கடைசியில் திருமணத்திற்கு போய் சேர வேண்டும் என்று தான் ஒரு கதையின் கருவாக இருக்கும். அதுதான் நீதியும் கூட.

ஆனால், திருமணம் ஆகி தன் மனைவியுடன் குடும்பமாக வாழும் கதாநாயகனுக்கும், திருமணம் ஆகி தன்கணவனுடன்குடும்பமாகவாழும் கதாநாயகிக்கும், உண்மையான ஒரு காதல் மலர்ந்தால் அவர்கள் எவ்வாறு கொண்டு செல்வார்கள்? இந்த சமுதாயத்தில் இருந்து அவர்கள் எவ்வாறு பாதிகபடுவார்கள்? குடும்பச் சிக்கல்களில் இருந்து அவர்கள் எவ்வாறு அந்த காதலைக் கடந்து போவார்கள்? என்பதை உணர்வு பூர்வமாக, எந்த விதமான ஆபாச நோக்கமும் இல்லாமல், திரைக்கதையில் எந்த சிறுப் பிழையும் இல்லாமல், ஒரு உன்னதமான படைப்பை உருவாக்கி இருக்கிறார் இயக்குநர்.

**இந்தத் திரைப்படத்தின் கதை சொல்லும் உத்தி, உண்மையிலேயே ஒரு கதாசிரியர் அறிந்து கொள்ள வேண்டிய விஷயம்.** வெடிகுண்டுகள் வெடிக்கும் கதைகளும், மெஷின் கன்கள் துளைக்கும் கதைகளும் எழுதுவது தற்போது ஒரு சுலபமான விஷயம். ஆனால், குடும்பத்தில் குண்டு வைப்பதைப் போன்ற ஆழமான அழுத்தமான குடும்பப் பின்னணியில், இது போன்ற ஒரு மாற்று சிந்தனை திரைப்படம் கதையாக எழுதப்படுவது, அதற்கு மிக நேர்த்தியான முறையில் திரைக்கதை எழுதுவதும், அவ்வளவு சுலபமான விஷயம் அல்ல..


அதுவும், நம் இந்தியாவில் காலாகாலமாக நாம் பின்பற்றும் கலாச்சாரங்களுக்கு நடுவில், இது போன்ற ஒரு அழகான திரைப்படம் சிறிது கதையில் பிழை ஏற்பட்டாலோ, திரைக்கதையில் பிழை ஏற்பட்டாலோ, அதுவும் ஷாருக்கான், அமிதாப்பச்சன் போன்ற மிகப்பெரிய நடிகர்கள் நடித்த அதில் குடும்பப் பின்னணியில் நடக்கும் நிகழ்வுகளுக்கு தவறான கருத்து ஏற்பட்டாலோ, அது எவ்வாறு போய் சேரும்? அதற்கான மக்களின் மோசமான விமர்சனங்கள் எவ்வாறு இருக்கும்? என்பது நீங்களே புரிந்து கொள்ள முடியும்.

அப்படிப்பட்ட ஒரு பொறுப்பான இடத்தில் இருந்து கொண்டு, இது போன்ற ஒரு திரைப்படத்தை எழுதுவதும் உருவாக்குவதும்... மீண்டும் சொல்கிறேன்... மிகவும் சவாலான விஷயம். அப்படி, இந்த திரைப்படத்தில் என்னதான் உள்ளது? என்னதான் சொல்ல வருகிறார்கள்? என்பதை பார்ப்போம்.

கால்பந்தாட்ட வீரரான ஷாருக் கான், தன் மனைவி ப்ரீத்தி ஜிந்தாவுடன் ஒரு குழந்தையோடு நியூயார்க்கில் வசித்து வருகிறார். ஒரு விபத்தில் தனது காலில் அடிபட்ட காரணத்தால், மனைவி பிரீத்தி ஜிந்தாவின் வருமானத்திலும், நிழலிலும் ஊனமான தன் காலுடன் விரக்தியில் வாழ்ந்து வருகிறார். அனாதை பெண்ணான ராணி முகர்ஜி தன் பள்ளியில் படித்த சக நண்பனான அபிஷேக் பச்சனுடன் ஒரு கட்டத்தில் திருமணம் நடக்கிறது. அன்பான கணவனாக இருந்தாலும் தன் பள்ளி நண்பனை கணவனாகவோ வாழ்க்கை துணைவராகவோ ஏற்றுக் கொள்ள முடியாத விரக்தியில் வாழ்ந்து வருகிறார். அபிஷேக் பச்சனின் தந்தையான அமிதாப்பச்சன், ஒரு கட்டத்தில் தன் மகனின் வாழ்க்கை சந்தோஷமாக இல்லை என்பதை புரிந்து கொள்கிறார்.

தன் குடும்ப நண்பரான ஷாருக்கானின் தாயாரிடம், இதைப்பற்றி கூறும் போது தான் ஷாருக்கானின் தாயாரும் என் மகனின் வாழ்க்கையும் சந்தோஷமாக இல்லை என்று கூறுகிறார்.

இந்த சிறு வயதில் இவர்களின் குடும்ப வாழ்க்கை ஏன் இப்படி அனவசியமாக போய்க் கொண்டிருக் கிறது? என்று இருவரது பெற்றோர் களும் யோசித்து கொண்டு இருக்கும் நேரத்தில்,





**ஷாருக்கானும், ராணி முகர்ஜியும், நண்பர்களாக பழகுகிறார்கள். இருவரும் தங்களது குடும்பத்தில் நடக்கும் பிரச்சனைகளை கூறி, யாரிடமும் தப்பு இல்லை; நம்மிடம் தான் தப்பு உள்ளது என்று புரிந்து கொள்கிறார்கள்.**

அன்பான கணவனும், அன்பான மனைவியும் கிடைத்து கூட, நம் இருவரது வாழ்க்கையின் நாம் சந்தோஷமாக இல்லை... இதை நாம் கொஞ்சம் மாற்றி அமைக்கலாம் என்று, தினமும் இருவரது குடும்பத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று ஒரு நண்பர்களாக இருவரும் சந்தித்து பல திட்டங்களை உருவாக்குகிறார்கள். ஒரு கட்டத்திற்கு மேலே அனைத்து திட்டங்களும் தோல்வியில் முடிந்தாலும், உண்மையான காதல் அவர்களிடம் இல்லை, நம் இருவருக்குள்ளும்தான் இருக்கிறது; உண்மையிலேயே சேர வேண்டியது நாம் இருவரும் தான், என்று ஷாருக்கான் கூறும்போது, அதிர்ச்சியில் உறைந்து போகிறார் ராணி முகர்ஜி.

நாம் இருவரும் செய்து கொண்டிருப்பது என்ன? இது எங்கே போய் முடியப் போகிறது, என்று குழப்பத்தில் மூழ்குகிறார்கள். இருவரும் அவரவர்கள் குடும்பத்தில் இதைப் பற்றி வெளிப்படையாக கூறும்போது, குடும்பத்தில் இடி விழுகிறது. யாராலும் இதை ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு துடித்துப் போகிறார்கள். இவர்கள் இருவரும் இணைந்தர்களா? அல்லது அவரவர்கள் குடும்பத்துடன் இணைந்தர்களா? என்பதை மிகத் தெளிவான முறையில் திரைக் கதையில் கூறியிருக்கிறார் இயக்குநர்..

இதைப் படிக்கும் போதே, இது என்ன கதை? இதை எப்படி திரைப் படமாக உருவாக்கி இருப்பார்கள்? என்று நீங்கள் நினைப்பது எனக்கு புரிகிறது. அதற்கு உங்களுக்கு விடை தெரிய வேண்டுமானால், உடனே இந்த திரைப்படத்தை பாருங்கள்.. 3மணி நேரத்திற்கு மேலாக இருந்தாலும், ஒரு அழகான கவிதையாக இந்த திரைப்படம் உங்களை வருடும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. 2006ஆம் ஆண்டு வெளியான இந்த திரைப் படம், உலக திரையரங்கில் அதிக வசூல் ஈட்டிய முதல் இந்திய திரைப் படம் என்ற பெருமையை கொண்ட திரைப்படம்.

**அணில் மேத்தாவின் ஒளிப்பதிவில் இந்த படம் முழுக்க முழுக்க அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் படம் பிடிக்கப்பட்டுள்ளதால், காட்சிகள் கண்களுக்கு மிக வித்தியாசமான ஒரு விஷுவலை தந்துள்ளது.**



**ஷங்கர் எசன் லாயின் பின்னணி இசையும் பாடல்களும் இந்த திரைப் படத்தின் இன்னொரு முத்திரை.**

மொத்தத்தில், திரைப் படத்துறையில் கால் பதிக்க நினைக்கும் வருங்கால கதாசிரியர்களும், திரை இயக்குநர்களும், வாழ்வில் தவிர்க்க முடியாத இந்தியா சினிமா திரைப்பட லிஸ்டில், இந்த திரைப்படம் நிச்சயமாக இடம் பெற்று இருக்க வேண்டும்.

**- வி. கார்த்தி குமார்**
எழுத்தாளர் இயக்குநர்






# இசைத்துறையில் AI

இந்த டிசம்பரில் உங்கள் மிருதங்கத்துக்கும் ஏ.ஐக்கும் ஜுகல் பந்தி, வந்துவிடுங்கள் என்றேன். நண்பர் **பூவலூர் ஸ்ரீ, டல்லாசிலிருந்து பிளைட் பிடித்து வந்துவிட்டார்.** அவர் கிராமி விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட ஒரு ஆல்பத்தில் வாசித் திருக்கிறார். இயந்திரத்தனமான எலக்ட்ரானிக் சத்தங்களில் நாட்டமில் லாதவர். நான் கேட்டதும் ஏ.ஐயுடன் சேர்ந்து வாசிக்க ஒப்புக் கொண்டு விட்டார். ஏன் ஒப்புக் கொண்டீர்கள் எனக்கேட்டேன். கற்றுக்கொள்ளத்தான் என்றார். **ஏ.ஐ இசைத்துறையிலும் வந்துவிட்டது** என்று கேள்விப்படுகிறேன். நான் உங்கள் வழியாகத் தான் ஃபேஸ்புக்கில் தமிழில் தட்டச்சு செய்யப் பழகினேன். அதே போல ஏ.ஐயும் உங்கள் வழியாகவே எனக்கு அறிமுகமாகட்டும் என்றார். கச்சேரியில் ஏ.ஐ என்ன வாசிக்கும், அதற்கு ஸ்ரீஜியின் மிருதங்கம் எப்படி பதில் தரும் என்று எங்கள் இருவருக்குமே தற்போது தீர்மான மில்லை. ஆனால் இருவருமே ஏ.ஐ இசைப் பரிசோதனைக்கு தயாரகிவிட்டோம்.

செங்கயற் கண்பனி ஆட ஆட மொய்குழல் வண்டினம் ஆட ஆடப் பித்தெம் பிரானொடும் ஆட ஆட ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

இது **திருவாசகம்** என்றார் நண்பர் இசையமைப்பாளர் நாராயணன். ஆமாம் இதற்குத்தான் நீங்கள் இசை யமைக்க வேண்டும் என்றேன். சிச்சுவேசன் என்ன என்றார். பிடி கொடுக்காத காதலன், அவனுக்காக ஏங்கும் காதலி. மாடர்னாக வேண்டும் என்றேன். பல நூற்றாண்டுகள் தொன்மையான வரிகள் நவீன துள்ளிசைக்கு பொருந்துமா என அவர் யோசிக்கவே இல்லை. வார்த்தை களில் உள்ள ஒலிகளை பிடித்துவிட்டால் சந்தம் பிடிப்பது எளிது என்பார் அவர். அதனால் **தைரியமாக குதம்பைச் சித்தரின் வரிகளையும் திருவாசகத்துடன் கலந்து ”குதம்பாய்” என்ற பாடலை ஒலிப்பதிவு செய்துவிட்டோம். நான் இயக்கியுள்ள யாதெனக்கேட்டேன் படத்தில் இந்தப்பாடல் இடம்பெற்றுள்ளது.**

எதற்கு இதைக் கூறுகிறேன் என்றால், ஏ.ஐ தானே பாடும், தானே ஒரு பாடலை கம்போஸ் செய்யும் என்கிறீர்களே, அதற்கு தமிழ் தெரியுமா? மாணிக்கவாசகரின் தமிழ் புரியுமா? அவருடைய திருவாசகத் துக்கும் ஒரு மனிதனைப் போல இசையமைக்குமா என உங்களுக்கு கேள்வி எழலாம். இந்தக் கேள்விக்கு பல பதில்கள் உள்ளன. முதல் பதில், தற்சமயம் இந்திய இசையைப் பொறுத்தவரை சரளிவரிசை அளவில்தான் உள்ளது. **இது இந்திய இசையை கற்கவில்லை. ஆனால் வெகுவிரைவில் இந்திய இசையைப் புரிந்து கொண்ட ஏ.ஐ வந்துவிடும். அதனை பயன்படுத்தி நம்மால் இந்திய திரை இசையைக் கொடுக்க முடியும்.**

மார்ச் மாதம் “என் விருப்பம்” என்ற மகளிர் தினச் சிறப்புப் பாடல் ஒன்றை உருவாக்கினோம். **நடிகை ரோகிணி பாடல் வரிகள் எழுத, வைக்கம் விஜயலட்சுமி பாடினார். இசை சிந்தூரி. இவர் சீதாராமம் படத்தின் இசையமைப்பாளர் விஷால் சந்திரசேகரின் மனைவி.** இருவருமே அபார திறமைசாலிகள். இப்பாடல் குறித்து விவாதிக்க ராயப்பேட்டையில் உள்ள அமெத்திசில் சந்திப்பு நடந்தது. சாண்ட்விட்ச் சாப்பிட்டுக்கொண்டே, சிந்தூரிக்கு சாட் ஜிபிடி வழியாக தமிழ் மற்றும் ஆங்கில பாடல் வரிகளை

தொடர்ச்சி பக்கம் - 8




21வது சென்னை சர்வதேச திரைப்பட விழா டிசம்பர் 14 முதல் 21 வரை நடைபெறுகிறது. இதில் திரையிட விடுதலை பாகம் 1, மாமன்னன், அயோத்தி, போர் தொழில் உள்ளிட்ட 12 தமிழ் படங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி பக்கம் - 1



இந்த விழாவில் பார்வையாளர்கள் எப்படி பங்கேற்கலாம் என்பது பற்றிய விவரங்கள் விரைவில் வெளியிடப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்த நிகழ்வினை ஒட்டி கலைஞரின் படைப்புகளை அனை வரும் காணும் வண்ணம், கண் காட்சி உட்பட பல்வேறு நிகழ்வுகளை நடத்த விழாக் குழுவினர் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

ஒரு மகத்தான திரைக்கலைஞரை தமிழ் திரையுலகம் திரைத் திருவிழாவாக கொண்டாடுவதை திரைமொழிசினிமா மாத இதழும் மகிழ்ச்சியுடன் வாழ்த்தி வணங்குகிறது.

## இண்டர்நேஷனல் விருதுகளை வென்ற




இசைஞானி இளையராஜா இசையில், சு. சமுத்திரம் அவர்கள் எழுதிய "ஒரு கோட்டுக்கு வெளியே" என்ற நாவல் உலகம்மை என்ற படமாக அண்மையில் வெளிவந்தது.

இந்த படம் உலக திரைப்பட விழாக்களில் கலந்து கொண்டு, **Asian Talent International Film Festival Award & Roshanib International Film Festival Award** என இரண்டு விருதுகளை பெற்றுள்ளது.

இது குறித்து இயக்குநர் ஜெயப் பிரகாஷ் அவர்களிடம் கேட்ட போது, "நல்ல, தரமான திரைப்படத்தை எடுத்து விட்டால் போதும்; அது உலகமெல்லாம் கொண்டாடப்படும் என்பதற்கு உலகம்மையே சாட்சி", என மகிழ்ந்தார்.

தொடர்ச்சி பக்கம் - 7




சாட்ஜிபிடி வழியாக எழுதிக் காட்டினேன். செயற்கை நுண்ணறிவை ஒரு கவிஞராகக் கருதி உங்களுடைய டியூனைத் தந்தால் "டம்மி விரிக்சை" இதிலேயே எழுதலாம் என்றும் சொன்னேன். என்னுடைய டியூன் எப்படி ஏஐக்கு புரியும் எனக் கேட்டார் சிந்தூரி. சவால்தான், ஆனால் புரிய வைப்போம் என்றேன். டைட்டானிக் படத்தில் வரும் *My Heart Will Go On* என்ற பாடல் வரிகளுக்கு மாற்று வரிகள் எழுது என்றேன். சில வினாடிகளில் மாற்று வரிகள் கிடைத்தது. ஆச்சரியப்பட்டார். இதே போல உங்கள் டியூனுக்கான சந்தம் சொல்லுங்கள், அதே சந்தத்தில் உள்ள இன்னொரு ஆங்கிலப்பாடலை எடுத்து அதன் வரிகளுக்கு மாற்று வரிகள் கேட்டால், அது உங்கள் டியூனுக்கும் பொருந்தும் என்றேன்.

சந்தங்கள் நீயானால் சங்கீதம் நானாவேன் ஏற்கனவே ஹிட்டான ஒரு பாடலை ஏ.ஆர்.இரகுமான், யுவன், எஸ்.பி.பி குரலில் மாற்றிவிட முடியும். இந்த ஏ.ஐ தொழில் நுட்பத்துக்கு வாய்ஸ் குளோனிங் என்று பெயர். அரை மணி நேரத்துக்கு அனிரூத்தின் குரலை உள்ளீடு செய்தால் போதும். முஸ்தபா பாடலை அனிரூத்தின் குரலில் பதிவு செய்துவிடலாம். இதே முறையில் எங்களுடைய யாதெனக்கேட்டேன் படத்தில் கவியரசு கண்ணதாசனின் குரலில் ஒரு பாடலை பதிவு செய்யும் வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது. கவியரசு கண்ணதாசனின் மகன் அண்ணாதுரை கண்ணதாசன் அவர்களை சந்தித்து இதற்கான முன் அனுமதி பெற்றுவிட்டோம். விரைவில் கண்ணதாசன் எழுதிய கவிதையை கண்ணதாசன் அவர்களின் குரலிலேயே கேட்கலாம்.

அனுபவித்தே அறிவதுதான் வாழ்க்கை எனில் ஆண்டவனே நீ ஏன் எனக்கேட்டேன். ஆண்டவன் சற்றே அருகே நெருங்கி அனுபவம் என்பதே நான்தான் என்றான்.

இவை கண்ணதாசனின் வரிகள். ஏ.ஐ என்பதும் ஒரு அனுபவம்தான். செயற்கை நுண்ணறிவையும் பழகுவோம், அனுபவிப்போம்.

ISR. செல்வகுமார் ஏ.ஐ நிபுணர் திரைப்பட இயக்குநர்




## சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ஆசியுடன் களமிறங்கும் HERO ஆதேஷ்சுதாகர்

இன்று, நான் அறிமுகமாகும் படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை, இந்திய சினிமாவின் சூப்பர் ஸ்டார் தலைவர் ரஜினிகாந்த் வெளியிட்டார் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய குழந்தைப் பருவத்தில் இருந்தே, அவருடைய ஒவ்வொரு அசைவையும் பின்பற்றி, அவரது ஒவ்வொரு மூச்சிலும் உத்வேகத்தைக் கண்டேன்.

நான் சினிமா உலகிற்குள் நுழையும் போது, தலைவர் கண்ணகி படத்தின் டிரெய்லரை பார்த்து தனது அன்பையும், ஆதரவையும் எனக்கு அளித்துள்ளார். என் இதயத்தை நிரப்பும் மகிழ்ச்சி விவரிக்க முடியாதது. டிசம்பர் 15 ஆம் தேதி திரைகளில் கண்ணகியை திரையில் காணலாம்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில், என் தந்தை இல்லாததை நினைத்து வருந்துகிறேன். அவருடைய அன்பும், ஆசியையும் நான் ஆழமாக உணர் கிறேன். இந்தப் பயணத்தில் நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அவரை பெருமைப்படுத்தும் வகையில் இருக்கும்.

மக்களான உங்கள் அன்பும் ஆதரவும் எனக்கு பெரிய பலத்தை கொடுக்கும். மேலும் டிசம்பர் 15 அன்று




கண்ணகியை உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள காத்திருக்கிறேன் இந்த பயணத்தை மறக்க முடியாததாக மாற்றுவோம்!

அன்பும் நன்றியும் **ஆதேஷ் சுதாகர்**



Owned, Printed and Published by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**